**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 44/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 10.07.2025.**

| Name : அய்யந்துரை | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கட்டிநாயக்கன்பட்டியில் குடியிருந்து தறி ஓட்டி வருகிறேன். எனக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது. கடந்த 06.07.2023ம் தேதி மாலை 04.30 மணியளவில் நான் வீட்டிலிருந்து கட்டிநாயக்கன்பட்டி மாரியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிட சென்றேன். கோவில் ரேடியோவில் சினிமா பாடல் போட்டார்கள். நான் சென்று வாசு என்பவரிடம் சாமி பாடல் போட சொன்னேன்.

2) அதற்கு வாசு உன் சௌகரியத்திற்கு பாட்டு போட முடியாது என்று என்னிடம் பிரச்சனை செய்தார். அங்கிருந்த சண்முகம் அவரது மகன்களான பூபதி, வரதராஜ், கோகுல், மனோகரன், மேகநாதன் நீ யாருடா கேட்பதற்கு தெவிடியாபையா என்று கெட்ட வார்த்தையால் திட்டி பிரச்சனை செய்தார்கள். அருகிலிருந்தவர்கள் அனைவரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தார்கள். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

3) மாலை 6 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது எதிரிகள் வந்து பிரச்சனை செய்தனர். நான் என் மனைவியும், மகனுடன் உள்ளே சென்று வீட்டின் உள்ளே தாழ்போட்டுக் கொண்டோம். எதிரிகள் அனைவரும் கல்லை எடுத்து என் வீடு

மற்றும் கதவின் மீது வீசினார்கள். தகவல் அறிந்து போலீசார் வந்தனர். எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

4) பின்னர் இரவு 9 மணியளவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது பாண்டியன் வளவு முனியப்பன் கோவில் அருகே எதிரிகள் அனைவரும் அங்கே வந்து எங்க மேல போலிசுல கேஸ் கொடுக்கபோறியா என்று சொல்லி முதுகு மற்றும் கன்னத்தில் அடித்தார்கள். கீழே கிடந்த கட்டை மற்றும் கல்லை எடுத்து என் கழுத்து மற்றும் முதுகில், இடது முழங்கால், முட்டி, இடது முழங்கை, இடது தோள்பட்டையில் கட்டையால் அடித்தார்கள்.

5) காயம் அடைந்த என்னை இரு சக்கர வாகனத்தில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் முதலில் சேர்த்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்தேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் சேலம் அரசு மருத்துவமனையில் வைத்து வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கட்டையால் தான் என்னை எதிரிகள் அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். கட்டை சா.பொ. 1 ஆகும். அடித்தவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும், ஆஜரில் மேகநாதன் உள்ளார் என்று சாட்சி அடையாளம் காட்டினார். மற்ற எதிரிகள் பூபதி, வாசு, வரதராஜன், கோகுல், மனோகரன் ஆகியோர் அடித்ததாக சொன்னார். இறுதி அறிக்கையில் காட்டப்பட்ட மனோகரன் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவரது வருகையின்மை குறித்து ஆட்சேபனை தெரிவிக்கமாட்டேன் என மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.